# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு.ப. ராஜ்குமார் , MA., LLB., Phd.,**
**வணக்கத்திற்குரிய மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**ந.க.எண் : 8670/2014 / எம்சி. 8 நாள் : 13.12.2014**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சிறப்புக் கூட்டம் **19.12.2014 வெள்ளிக்கிழமை காலை 11.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

.

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம் புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சிறப்புக் கூட்டம் - டிசம்பர் 2014

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | 1 |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** | |
| **1** | நகரமைப்புப் பிரிவு - நில உரிமை மாற்றம் – பி15 ரத்தினபுரி காவல் நிலையம் – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான சங்கனூர் கிராமம் நகரளவு வார்டு எண்.19, ப்ளாக் எண்.45, டி.எஸ்.எண்.16/பாகம் பகுதியில் 15 சென்ட் பரப்பளவு இடத்தினை காவல் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்தல் – நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை சமர்ப்பிக்க மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | **2** |

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

**(குறள் - 545)**

**விளக்கம்**

நீதியின் வரைமுறைக்குக் கட்டுப்பட்டு நடைபெறும் நல்லாட்சி, நாட்டிற்குப் பருவமழை தப்பாது பெய்து வளமான விளைச்சல் செழிப்பதற்கு ஒப்பாகும். நல்லாட்சியும் வேளாண்மையும் சேர்ந்து சிறக்க விளைச்சல் பெருகும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

**பொருள்:** நில உரிமை மாற்றம் – பி15 ரத்தினபுரி காவல் நிலையம் – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான சங்கனூர் கிராமம் நகரளவு வார்டு எண்.19, ப்ளாக் எண்.45, டி.எஸ்.எண்.16/பாகம் பகுதியில் 15 செண்ட் பரப்பளவு இடத்தினை காவல் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்தல் – நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை சமர்ப்பிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைத்தல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ரத்தினபுரி பி15 காவல் நிலையம் அமைக்க மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை வழங்க வேண்டி காவல் துறை ஆணையர் கேட்டுக் கொண்டதன் பேரில், கோயம்புத்தூர் மாநகராட்சி சங்கனூர் கிராமம், நகரளவு வார்டு எண்.19, ப்ளாக் எண்.45, டி.எஸ்.எண்.16/பாகம் பகுதியில் உள்ள இடத்தை பி15 ரத்தினபுரி காவல் நிலையம் அமைக்க காவல் துறைக்கு சந்தை மதிப்பு அடிப்படையில் நில உரிமை மாற்றம் செய்யவும் முன்நுழைவு அனுமதி வழங்கவும் நகராட்சி நிர்வாக பிரேரணை சமர்ப்பிக்கவும் மேலும், அந்த இடத்தில் இருக்கும் கட்டிடத்தின் மதிப்பை கணக்கிட்டு அதற்குரிய தொகையையும் நிலமதிப்பில் சேர்த்துக் கொள்ளவும் தீர்மானித்து மாமன்ற தீர்மானம் எண்.240, நாள்.12.11.2014ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தற்போது கோவை மாநகர காவல் ஆணையர் அவர்களின் 28.11.2014ம் தேதிய கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான டி.எஸ்.எண்.16/பகுதியில் காலியாக உள்ள சுமார் 15 செண்ட் அளவு மட்டுமே காவல் துறைக்கு கோரப்பட்டதாகவும், காவல்துறைக்கு அரசால் வரையறுக்கப்பட்ட கட்டிட அமைப்பிலேயே கட்டிடம் கட்டப்பட வேண்டியுள்ளதால் மாநகராட்சியால் வழங்கப்படும் கட்டிடத்தை இடித்துவிட்டுதான் காவல்நிலைய கட்டிடம் கட்டப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்து எனவே, ஏற்கனவே கோரியுள்ளவாறு இடத்தில் உள்ள கட்டிடத்தை தவிர்த்து சுமார் 15 செண்ட் காலியிடம் மட்டும் பி15 காவல்நிலையம் கட்டுவதற்கு காவல் துறைக்கு நிலமாற்றம் செய்து முன்நுழைவு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, காவல் துறை ஆணையர் அவர்களின் 28.11.2014ம் தேதிய கடிதத்தில் கோரியதன் அடிப்படையில், ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மாமன்ற தீர்மானம் எண்.240, நாள்.12.11.2014ஐ ரத்து செய்யவும், மாநகராட்சிக்கு சொந்தமான டி.எஸ்.எண்.16/பகுதியில் சுமார் 15 செண்ட் அளவு காலி இடத்தினை மட்டும் பி15 காவல் நிலையம் அமைக்க காவல் துறைக்கு சந்தை மதிப்பு அடிப்படையில் நில உரிமை மாற்றம் செய்யவும் முன்நுழைவு அனுமதி வழங்கவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். 13927/2000/எம்.எச்.5

---

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**